1895

# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 08 | செயன்முறைத் தொழிநுட்பம் | நேரம் : |
| --- | --- | --- |
| | சுட்டெண் : ........................................................... | 2.00 மணித்தியாலம் |

பகுதி - I

❖ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. உணவை அறுவடை செய்தவுடன் நீர் பயன்படுத்தாது தூரிகை கொண்டு சுத்தம் செய்யும் உணவுகள் எவை?
   1) கத்தரி, வெண்டி
   2) மாங்காய், பப்பாசி
   3) கரட், பீற்றூட்
   4) மரவள்ளி, ஈரப்பலா
2. மு.ப 10.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிக்குள் அறுவடை செய்யும் விளைச்சல்
   1) கீரை, பொன்னாங்கண்ணி
   2) மாம்பழம், சித்திரக்குடும்பப்பழம்
   3) பப்பாசி, அன்னாசி
   4) தக்காளி, வெண்டி
3. மனித சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் விலங்கு (கால்நடை) மலத்துடன் வெளியேற்றப்படும் நுண்ணங்கி (பக்றீரியா)
   1) சல்மொனெல்லா
   2) ஸ்ரெப்பிளே கொக்கசு லக்டிஸ்
   2) ஸ்ரெப்ரோ கொன்கஸ் லக்டீஸ்
   4) அஸ்பஜிலஸ்
4. பின்வருவனவற்றுள் குண்டுப்போதிகையின் பயன்பாடாகக் கருதப்படுவது
   1) உராய்வைக் குறைத்தல்
   2) உராய்வைக் கூட்டல்
   3) உராய்வில் மாற்றத்தை ஏற்படுத்தாதிருத்தல்
   4) மீதமாக உள்ள இடத்தை நிரப்பல்
5. பின்வருவனவற்றுள் உணவுவகைகளை கிருமியழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்
   1) ஆழ்குளிரூட்டி 2) குளிரூட்டிகள் 3) அமுக்கவடுலென் 4) நீரகற்றிகள்
6. செயற்றிட்டம் ஒன்றை மேற்கொள்ளும் படிமுறைகளில் அமைவது
   1) திட்டமிடல்
   2) தீர்மானித்தல்
   3) பின்னூட்டல்
   4) மேற்கூறிய யாவும் சரி
7. உற்பத்திக் கிரயத்தின் கூறுகளுள் அமையாதது
   1) பொருட்கிரயம்
   2) கூலிக்கிரயம்
   3) செலவுக்கிரயம்
   4) பொதுமேற்தலைக்கிரயம்
8. ஆக்கிரமிப்புத் தாவரமாகவும் விவசாயத்திற்கும் பயன்படுத்தக்கூடிய கடல் தாவரங்களுள் ஒன்று
   1) துன்கிரிய, பன்புல்
   2) கெக்கட்டிக்கிழங்கு
   3) நீர்சேம்பு
   4) ஜப்பான் ஜக்சோணியா
9. வீடுகளில் மடித்து வைக்கும் உக்திக்கு உதாரணமாக அமையக்கூடிய உபகரணங்களாக அமைவது
   1) கடதாசிப் பெட்டியும் அலுமாரியும்
   2) பிளாத்திக்கு கோப்பையும் பிளாஸ்ரிக் கதிரையும்
   3) வானொலியின் வான்கம்பியும், குடையும்
   4) தொலைக்காட்சியும் வாயிற்கதவும்

kalvi.lk

10. அறிவுறுத்தல், ஊக்கப்படுத்தல், நினைவூட்டல் என்பன எவற்றின் அடிப்படைக் கூறுகளாக அமைகின்றது?
   1) விற்பனை மேம்படுத்தலின் அடிப்படைக் கூறுகளாகும்.
   2) உற்பத்திக் கிரயத்தின் அடிப்படைக் கூறுகளாகும்.
   3) சந்தை ஆய்வின் வகைகளாகும்.
   4) விளம்பரத்தின் அடிப்படைக் கூறுகளாகும்.

(10×1=10 புள்ளி)

**2) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. உற்பத்தி செய்யப்படும் பொருள் அல்லது சேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு வளங்களின் அல்லது உள்ளீடுகளின் பெறுமதியே உற்பத்திக் கிரயம் எனப்படும். [ ]
2. பல்நோக்கு உக்திகள் கொண்ட பொருட்களுக்கு உதாரணமாக செல்லிடத் தொலைபேசியைக் குறிப்பிடலாம். [ ]
3. மின் பற்றாசுக்கோலின் முனையில் இரும்பு உலோகம் காணப்படுகின்றது. [ ]
4. மா, பப்பாசி போன்றவற்றை அறுவடை செய்தவுடன் அவற்றின் பாலை அகற்றுவதற்கு ஓரளவு சூடான நீரில் கழுவுதல் வேண்டும். [ ]
5. மீதேன், காபனீரொட்சைட்டு, நைதரசன் ஒட்சைட்டு போன்றவை பச்சை வீட்டு வாயுக்கள் என அழைக்கப்படும். [ ]

(5×1=5 புள்ளி)

**3) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.**

1. பண்ணைக் கழிவுப் பொருட்களில் இருந்து கூட்டெருவும் .......................... தயாரிக்கலாம்.
2. தோடம்பழத்தோலை செறிவுள்ள சீனிக்கரைசலில் அமிழ்த்துவதால் .......................... தாயாரிக்கலாம்.
3. இலத்திரனியல் சுற்றுக்களை ஒருங்கு சேர்ப்பதற்கெனப் பயிலுநர்களுக்குப் பொருத்தமான பலகை .......................... வகையாகும்.
4. கட்டடத்திற்காகச் செலுத்தப்படும் வாடகை, சோலைவரி, காப்புறுதிக் கட்டணம், மின்சாரக் கட்டணம், போக்குவரத்து, உபகரணப் பராமரிப்பு போன்ற செலவுகள் .......................... செலவில் அடங்கும்.
5. அழுகலடைதல், நசிதல் என்பவற்றால் விளைச்சலின் தொகையில் அல்லது அளவில் அல்லது நிறையில் ஏற்படும் குறைவே .......................... இழப்பு எனப்படும்.

(புள்ளித்தாயப்பலகை, அளவுரீதியானது, கண்டிட்பீல், உயிர்வாயு, பொதுமேந்தலை)

(5×1=5 புள்ளி)

## பகுதி - II

❖ முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை தருக.

01) 1. நீங்கள் இம்முறை செய்முறைத் தொழிநுட்பத் திறன்கள் பாடத்தில் மேற்கொண்ட செயற்றிட்டம் சார் அல்லது செய்முறை சார் செயற்பாடு ஒன்றினைக் குறிப்பிடுக.
   2. நீங்கள் மேற்கொண்ட செயற்பாட்டிற்குத் தேவைப்பட்ட பொருட்கள் எவை?
   3. நீங்கள் மேற்கொண்ட செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் பயன்பாடு என்ன?
   4. செயற்பாட்டின்போது எதிர்கொண்ட சவால்கள் எவை?
   5. செயற்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிய பின்பு உங்கள் மனதில் தோன்றிய எண்ணம் 2 தருக.

(10 புள்ளிகள்)

02) 1. பண்ணை விலங்குகளை வளர்ப்பதால் கிடைக்கும் பயன்கள் 3 தருக.
   2. உள்ளக வளர்ப்பு முறையினால் கிடைக்கும் அனுகூலம் 3 தருக.
   3. பண்ணைக் கழிவுகள் மூலம் துர்நாற்றம் வீசும் வாயுக்கள் எவை?
   4. நீர் முதல்களைச் சார்ந்த விலங்கு வகைகளை அட்டவணைப்படுத்துக.

(10 புள்ளிகள்)



kalvi.lk

03) 1. அறுவடைக்குப் பின்னரான இழப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 தருக.
2. அறுவடைக்குப் பின்னரான இழப்பின் இரண்டு வகைகளும் எவை?
3. உணவை நீண்டகாலம் பழுதடையாது பேணும் நவீன முறைகள் 3 தருக.
4. உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

(10 புள்ளிகள்)

04) 1. மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை அதிக பயன்தரு தன்மைகொண்டதாகப் பயன்படுத்தத் தக்க சிக்கனமான உக்திகள் 4 தருக.
2. அடுக்கி வைக்கும் உத்திக்கு உதாரணம் தருக.
3. இருவாயியின் இரண்டு வகைகளும் எவை?
4. உராய்வு நீக்கியாகப் பயன்படும் பொருட்கள் 2 தருக. (10 புள்ளிகள்)

05) 1. உற்பத்திக் கிரயத்தின் மூன்று கூறுகளும் எவை?
2. மொத்த உற்பத்திக் கிரயம் என்றால் என்ன?
3. விளம்பரம் செய்யும் ஊடகங்கள் 3 தருக.
4. சந்தை என்றால் என்ன? (10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457